கந்தகத்திணை

# பாப்பா பாக்கள்

மின்–நூல்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.TamilAcademy.com

அறிவே வளம்

## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

**சிவகாசி - 626 189**

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**சிவகாசி - 626 124**

**இணைந்து உருவாக்கும்**

**மின்-நூல் (E-book)**

# கந்தகத் திணை

**(புதியதோர் உலகம் செய்வோம்)**

(2015 - 2016)

# பாப்பா பாக்கள்


**ப. கணேஷ்வரி**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை**

# மழலைத்துளிகள்

குழந்தைகள் மழலை மொழி பேசுவது அழகு. மழலை கொஞ்ச இசைசேர்த்துப் பாடுவதோ அழகிலும் அழகு. குழந்தைகளின் வாயில் தவழ்ந்து உயிர்பெறும் தத்தக்கா பித்தக்கா எழுத்துக்களும் தலையசைக்க வைக்கும் பாடல்களும் உலகின் உச்ச அழகு எனில் மிகையில்லை.

கந்தகத் திணை, மயக்குறு மக்களாம் குழந்தைகளுக்கென பூத்த பாக்களோடு மின்–நூலாக (E–book) உருவாக்கம் பெறுகின்றது. இசை, கருத்து, துள்ளல் ஆகிய மூன்றையும் இணைத்தும், குழைத்தும், குழைந்தும் செய்த பாக்களின் தொகுப்பே பாப்பா பாக்களாகும்.

ஆழ்ந்தும், ஆய்ந்தும், தோய்ந்தும், தேர்ந்தும், தெளிந்தும், அனுபவித்தும், பாடலோடு நீச்சலிட்டும் மொழியைப் பயன்படுத்தி, பண்படுத்தி மழைப்பெருக்கினைப் போலப் பாப்பா பாக்களை யாத்துள்ள நம் தமிழ்த்துறை முனைவர்பட்ட ஆய்வு மாணவர் குழந்தைக் கவிஞர் ப. கணேஷ்வரி போற்றுதற்குரியவர். மொழியோடு ஆடியும், மொழியை ஆட்டுவித்தும் படைத்துள்ள குழந்தைமொழி படிப்போரின் உள்ளங்களில் இசையை மீட்டிக் காட்சிப் படிமங்களைக் கண்முன் உலாவ விடுகின்றது.

அசையும் யானை, கத்தும் பூனை, ஆடும் மயில், ஓடும் முயல், கரையும் காக்கை, நீந்தும் நண்டு, துறுதுறுத்து அலையும் அணில் போன்ற உயிரினக் காட்சிகள் குழந்தை உலகின் விந்தைக் காட்சிகளாகும். இவ்விந்தைக் காட்சிகளை 'பாப்பா பாக்கள்' நம் கண்முன் காட்சிப்படுத்தி நம்மையும் குழந்தையாக்கி மகிழ்விக்கின்றன.

நம் வீட்டுத் தோட்டத்தில் நிறைந்தும் அமர்ந்தும் காய்த்தும் காட்சியளிக்கும் குண்டு பூசணி – உழவனின் கலப்பையில் அகப்பட்டாலும் மண்ணுள் வாழ்ந்து மண்ணுக்கு உரமூட்டும் மண்புழு – நம் வீட்டுச் சுவரில் கம்பீரமாய் வாழும் கடிகாரம் – மண்ணாய்ப் பிறந்தாலும் சக்கரக் கருவறையில் உயிர்பெறும் மண்குடம் – சாட்டை என்னும் சட்டை அணிந்து சுழலும் பம்பரம் போன்றவையும் படைப்பாளியின் படைப்பு உளியால் உரம் பெற்றுள்ளன. 'பாப்பா பாக்கள்' மின் –நூலாய் ஆக்கம்பெற வழிகோலிய கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றி.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோட்டீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர்** திரு. **இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphics ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
ஒருங்கிணைப்பாளர், கந்தகத்திணை.

# தேன்சொட்டுக்கள்

எல்லோருக்குள்ளும் குழந்தைத்தனம் இருக்கும். ஒரு குழந்தையாய், மங்கையாய், தாயாய் என்னுள் இயங்கும் குழந்தைத்தனங்களைக் குழந்தைப் பாடல்களாய் வடித்துள்ளேன். அம்மாவில் தொடங்கி ஆலமரம், மண்பானை, பம்பரம் எனப் பண்பாட்டு எச்சங்களின் வித்துக்களைப் பாடல்களில் பதியமாக்கியுள்ளேன்.

விருந்தாளியாய் வலம் வரும் காக்கை, என் தோட்டத்தில் காய்த்த பூசணி, குளத்தில் பிடித்து விளையாடிய நண்டு, காலத்தைக் கவனிக்க வைத்த கடிகாரம், சிறுவயதில் வளர்த்த முயல்குட்டி, நான் பார்த்துப் பார்த்து மருண்ட யானை, முதலில் நனைந்த மழை என நான் கண்ட, பழகிய, அனுபவித்த சில உயிரினங்களைப் பாடல்களில் பறக்கவும், குதிக்கவும், தாவவும், திரியவும் உலவ விட்டுள்ளேன். என் மனதுள் தாளம் போட்ட பாடல்கள் உங்கள் கரங்களில் மின் – நூலாய் மலர்ந்து நிற்கின்றது.

குழந்தைப் பாக்கள் 'பாப்பா பாக்கள்' என்னும் மின் – நூலாக (E–book) வெளிவருவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த கல்லூரி நிர்வாகத்தினருக்கும், மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை.அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும் கல்லூரித் தாளாளர் மேன்மைமிகு **கி.அபிரூபன்** அவர்களுக்கும் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும்
**'இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கின்பந் தரும்படி வாய்த்த நல்அமுது!'**
என்று தாய்மொழியாம் தமிழ்மொழிப் பற்றோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும்
**அமெரிக்க உலகத்தமிழ்க் கல்விக்கழகத் தலைவர் மற்றும் செயலர்**
**திரு. இரா. வெங்கடேஷ்,** (PLM Leader in FORD, America)
அவர்களுக்கும் உளமார்ந்த நன்றி.

எனதளவில் இக்குழந்தைப்பாடல்கள் உயிர்பெற்றதற்கு முக்கியப் புள்ளியாய்த் திகழும் கந்தகத்திணை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் **ந. அருள்மொழி** அம்மா அவர்களுக்கு அன்பார்ந்த நன்றி.


பாப்பா பாக்கள் குழந்தைகள் மனதைக் கொள்ளை கொள்ளட்டும்! கொண்டாடி மகிழட்டும்! எல்லாப் புகழும் என் தாய்க்குச் சமர்ப்பணம்.

இன்பக் களிப்புடன்,
**ப. கணேஷ்வரி**

# பொருளடக்கம்


| வ. எண். | படைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01. | காக்கை | 01 |
| 02. | முயல் | 02 |
| 03. | அணில் | 04 |
| 04. | நண்டு | 05 |
| 05. | பூனையாரே | 07 |
| 06. | மண்புழு | 09 |
| 07. | அன்பு | 10 |
| 08. | மழை | 11 |
| 09. | மண்பானை | 12 |
| 10. | பம்பரம் | 14 |
| 11. | பூசணி | 15 |
| 12. | மயில் | 16 |
| 13. | கடிகாரம் | 17 |
| 14. | ஆலமரம் | 18 |
| 15. | யானை | 19 |

# 01 காக்கை



காக்கை காக்கை ஓடிவா...
கரைந்து கரைந்து பாடிவா...
விதவிதமாய்ச் சமைக்கவா?
வீட்டுக்கு விருந்தாளி அழைத்து வா...
உனக்கும் படைப்பேன் ஓடிவா...
உன் கூட்டத்தோடு உண்ணவா...
மூதாதையரின் அம்சமே...
முன்னும் பின்னும் பறந்து வா...
கூர்மையான அலகுடனே
குண்டுக் கண்ணைச் சிமிட்டி வா...
தானியங்கள் உண்ண வா
தவளை நண்டைப் பிடிக்க வா...
வயலில் உள்ள பூச்சிகளை
வாரிப் பிடித்துத் தின்னவா...
சனிபகவானின் வாகனமே – நீ
சுற்றுச்சூழல் காத்திட வா...

# 02 முயல்



மூங்கில் காடு சென்றேன்
முயலு ஒன்றைக் கண்டேன்
முயலு ஒன்றைக் கண்டேன் - அது
உறங்கும் அழகைக் கண்டேன்.

மகிழ்ந்துடனே வீடு சென்று
அம்மாவிடம் சொன்னேன்.
முயல் மனிதன் போல உறங்கும் நேரத்தை
வகுத்துக் கொண்டதை அறிந்தேன்.

மற்றொரு நாள் மாடி ஏறி
மழையின் அழகை ரசித்தேன்.
அந்த நேரம் ஏதோ ஒன்று
ஓட்டம் பிடிக்கக் கண்டேன்.
ஓடிச் சென்று அம்மாவிடம்
வியக்க வியக்க நின்றேன்.
வேகமாக ஓடிச் சென்றது
வெள்ளை முயலென அறிந்தேன்.


முறுக்கு மீசை அப்பாவிடம்
முயலின் கதை கேட்கவே
அன்புடன் அப்பாவும் சொன்னாரே
“தாவரங்களைத் தின்னுமாம்
தத்தித் தத்தித் திரியுமாம்
பஞ்சு போன்ற உடலுடனே
பத்தாண்டு வாழுமாம்
சமவெளியிலும் சதுப்புநிலத்திலும்
சரியாய் வாழ்க்கை அமைக்குமாம்”

சரியாய்ச் சொன்ன அப்பாவிற்குச்
சல்யூட் போட்டேன் நானுமே
முயலைப் போன்று வேகம் கொள்வோம்
முன்னேறும் போது விவேகம் கொள்வோம்.



* * *

# 03 அணில்



அணில் குட்டி அணில் குட்டி
அழகான அணில் குட்டி
குட்டிக் காதை விடைத்து – நீயும்
குசும்பு செய்யும் அணில் குட்டி...

முன்னங் கால்களைத் தூக்கி – அழகாய்
உணவைத் தின்னும் அணில் குட்டி...
நீ கடித்துப் போட்ட கொய்யாவோ
தித்திப்பாகுது அணில் குட்டி...


தின்னும் பழக் கொட்டைகளை
மண்ணில் புதைக்கும் அணில்குட்டி...
திசைகள் எட்டும் மரம் வளர
தினம் உழைப்பாய் அணில்குட்டி...



மணலில் புரண்டு மண்ணை அள்ளிப்
பாலம் அமைத்தாய் அணில்குட்டி
முதுகில் மூன்று நாமத்துடனே
முண்டித் திரியும் அணில் குட்டி...

உன்னோடு விளையாட ஆசை – நீயும்
ஓடி வருவாய் அணில் குட்டி.

# 04 நண்டு




நண்டு பார்! நண்டு பார்!
நகர்ந்து செல்லும் நண்டு பார்!
வரிசையாகக் காலை எடுத்து
வகையாய்ச் செல்லும் நண்டு பார்!

நண்டு பார்! நண்டு பார்!
குளத்தில் திரியும் நண்டு பார்!
அடிவயிற்றில் முட்டையை
அழகாய்ச் சேகரிக்கும் நண்டு பார்!

நண்டு பார்! நண்டு பார்!
குளத்தில் திரியும் நண்டு பார்!
கூட்டுக் கண்கள் கொண்டு தான்
குழியில் வாழும் நண்டு பார்!





நண்டு பார்! நண்டு பார்!
ஓடையில் ஓடும் நண்டு பார்!
ஆண்டுக்கொரு முறையுமே
ஆடை கழற்றும் நண்டு பார்!

தேங்காய் நண்டு! குளுவான் நண்டு!
நீலக்கால் நண்டு பார்!
நீச்சல் பழகும் நேரத்திலே
நீந்திச் செல்லும் நண்டு பார்!

நண்டு பார்! நண்டு பார்!
கடல் உணவு நண்டு பார்!
சமைத்துச் சாறும் குடிக்கவே
சளியைப் போக்கும் நண்டு பார்.

* * *

# 05 பூனையாரே



பூனை மாமா பூனை மாமா
எங்க போறீங்க?
பசியெடுக்குது பாலும் சோறும்
உண்ணப் போறேங்க

பூனை மாமா பூனை மாமா
யார் வீட்டுக்குப் போறீங்க?
பக்கத்து வீட்டுப் பட்டு வீட்டுக்குப்
பாங்காய்ப் போறேங்க.

பூனை மாமா பூனை மாமா
அங்க என்ன செய்வீங்க?
தாவித் திரியும் எலிகளைத் தான்
பிடிக்கப் போறேங்க.

பூனை மாமா பூனை மாமா
எங்க தூங்குவீங்க?
கதகதன்னு அடுப்படியில தான்
தூங்கப் போறேங்க.


பூனை மாமா பூனை மாமா
ஏன் குறுக்கே போறீங்க?
கெட்ட சகுனம் பார்க்கும்
மூடரையும் திருத்தப் போறேங்க.

பூனை மாமா பூனை மாமா
சரியாச் சொன்னீங்க
புதுமையான உலகம் காண
புரட்சி செய்வோங்க.



* * *

# 06 மண்புழு



கதை கேளு கதை கேளு
மண்புழுவின் கதை கேளு
உருளை வடிவ உடலுடனே
ஊர்ந்து செல்லும் உடலியாம்
தண்ணீரைக் கண்டாலே
தரிகிடதாம் போடுமாம்
தாவரத்தின் கழிவை உண்டு
உரத்தைப் பெருக்கச் செய்யுமாம்
பயிர் மகசூலைக் கொடுக்குமாம்
பாரில் மண்ணரிப்பைத் தடுக்குமாம்
உழவர்களின் நண்பனாம் - இதை
உணர்ந்தால் நாளும் நன்மையாம்.

# 07 அன்பு

அழகுப் பாப்பா
அருமைப் பாப்பா
அருகே ஓடிவா – நீ
அன்பை நாடி வா
நம்ம வீடும்
நல்ல நாடும்
உயிராய் எண்ணிடு – அதில்
உறவாய் வாழ்ந்திடு...
தேடித் தேடிச் சேகரிக்கும்
தேனீ போலவே
தேடல் பெற்றிடு – நல்ல
தெளிவு பெற்றிடு...
ஊர்ந்து செல்லும்
எறும்பைப் போல
ஒன்றாய் வாழ்ந்திடு – நல்ல
ஒழுக்கம் போற்றிடு...
வானில் பறக்கும்
பறவை போல
பறக்க எண்ணிடு – பாசம்
போற்றி வாழ்ந்திடு...
ஆற்றில் ஓடும்
நீரைப் போல
அழகாய்ச் சென்றிடு – மாசு
அகற்றி வாழ்ந்திடு...
எத்தனை இடர்
ஏற்பட்டாலும்
அன்பால் வென்றிடு – நீ
அறிவால் உயர்ந்திடு...







# 08 மழை



குட்டிக் கண்ணே ஓடி வா!
குடையைத் தூக்கி வீசி வா!
தட்டித் தட்டித் தாளம் போடும்
தங்க மழையில் நனைந்திட வா!

மண்ணைக் குளிரச் செய்யுதே
மரங்கள் செழிக்கப் பெய்யுதே
மின்னல் இடியும் முழங்குதே
மீன்கள் துள்ளிக் குதிக்குதே

தத்தித் தத்தித் தாவிடும்
தவளை தாளம் கொட்டுதே
ஆற்றில் வெள்ளம் போகுதே
அழகாய்க் கப்பல் விடுவோமே

பரந்த பூமி வெளியெலாம்
பசுமைக் கோலம் பூண்டதே
மக்கள் மகிழ்ச்சி கொள்ளலாம்
மழைக்கு நன்றியும் சொல்லலாம்.

# 09 மண் பானை



ஓடித்திரியும் தம்பிப் பாப்பா
ஒரு நிமிடம் நில்லுங்க
மண் பானை கதை கேட்டு
மகிழ்வோம் நாமும் வாருங்க...

குழைச்சு வச்ச களிமண்ணால்
குயவன் செய்த பானை
உருண்டு திரண்ட பானை – அது
உலக உருண்டைப் பானை (ஓடித் திரியும்...)

சுற்றும் வட்டச் சக்கரத்தில்
சுழன்று சுழன்று எழும்புது
தலையாட்டிப் பொம்மை போல
தரையில் அசைந்து நிக்குது (ஓடித் திரியும்...)

தொட்டுத் தட்டிப் பார்த்தாலே
தாள ஓசை எழுப்புது
அடுப்பில் சாதம் பொங்கவே
அனலைத் தாங்கி நிக்குது (ஓடித் திரியும்...)

குளிர்ச்சி நிறைந்த தண்ணீரைக்
குடம் குடமாய்க் கொடுக்குது
தொப்பை வயிறைக் காட்டியே
கடையில் தொகுப்பாய் இருக்குது (ஓடித் திரியும்...)

குழந்தைகளின் விளையாட்டிலே
குதூகலமாய் இருக்குது
அம்மன் கோவில் வாசலிலே
ஆயிரம் கண்ணுடன் ஒளிருது. (ஓடித் திரியும்...)





* * *

# 10 பம்பரம்



பம்பரமாம் பம்பரம்
தேக்கங் கட்டைப் பம்பரம்
சாட்டை கொண்டு சுழற்றவே
சத்தம் போடும் பம்பரம்

குண்டுக் குண்டுப் பம்பரம்
கூம்பு வடிவப் பம்பரம்
கூட்டமாக ஆடும்போது
குழிபறிக்கும் பம்பரம்

தம்பி தங்கை சுற்றும் போது
தரையில் கோலம் போடுதே
கோபத்தோடு சீறும் போது
கொந்தளித்துப் பறக்குமே



கொஞ்சம் வேகம் குறையவே
வெட்கப்பட்டுத் தலைசாய்க்குமே
பம்பரமாம் பம்பரம்
தேக்கங் கட்டைப் பம்பரம்.

* * *

# 11 பூசணி

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே;
எப்போதும் கொண்டாட்டமே !
தப்பாமல் பூப்பூத்திடும்;
பூசணிக்காய் தோட்டமே !



புத்தாண்டில் பூப்பூத்திடுமே !
பூக்கள் எல்லாம் காய்த்திடுமே !
காய்க்கும் பூசணி பார்த்தாலே;
கட்டிக் கரும்பெனச் சுவைதருமே !

பச்சை நிறத்தொரு பூசணியாம்;
மஞ்சள் நிறத்தொரு பூசணியாம்;
மருந்தாய் அதுவும் உதவிடுமே !
தழும்பை மறைக்கச் செய்திடுமே !



சுற்றிச் சுற்றிப் பார்த்தாலே;
சுவைக்கச் சொல்லித் தூண்டுமே !
விட்டமின் சத்தும் தந்திடுமே !
சுறுசுறுப்பாக ஆக்கிடுமே !

தமிழ்நாட்டில் எங்கும் பார்த்திடலாம்;
தரணியில் எங்கும் நட்டிடலாம்;
வயதானவரும் சாப்பிடலாம்;
வளமாய் நாமும் வாழ்ந்திடலாம் !

# 12 மயில்



வண்ண வண்ண மயிலிது;
வயலில் நடந்து திரியுது !
அழகான தோகை விரித்து;
அசைந்து அசைந்து ஆடுது !

மழைக்கால நாட்களிலே;
மகிழ்ந்து அமர்ந்து அகவுது !
உயரமான இடத்தில் சென்று;
ஒய்யாரமாய் தோகை விரிக்குது !

ஆறுபடை முருகனுடன்;
ஆசை பொங்க நிக்குது...

தேனும் மயில் தோகையுமே;
குழந்தை இருமல் போக்குமாம் !
நடனமாடும் மயிலிது;
நலமும் தந்து உதவுது !

# 13 கடிகாரம்







கடிகாரமாம் கடிகாரம்;
காலம் காட்டும் கடிகாரம்...
டிக் டிக் ஒலியாலே;
தாளம் போடும் கடிகாரம்...

பல நாட்கள் பயணம் செய்தும்;
பாதை மாறா கடிகாரம்...
இறகு இல்லா சேவல் தானே !
எனை எழுப்பும் நல்ல கடிகாரம்...

அங்கும் இங்கும் அசையாது;
வீட்டை அழகு செய்யும் கடிகாரம்...
திருமணமாம் விழாக்களுக்கும்;
பரிசாகும் கடிகாரம் !

சுறுசுறுப்பாய்ச் சுற்றித் திரியும்;
சுவரில் மாட்டும் கடிகாரம்...
பரிணாமங்கள் பல கொண்டது;
பண்பு மாறாத கடிகாரம் !

# 14 ஆலமரம்




அதோ பார் ஆலமரம்
அகலமான ஆலமரம்
விழுதுகளோடு அசைந்தாடி
நம்மை அழைக்கும் ஆலமரம்

அலைந்து திரியும் பறவைகளுக்கு
அடைக்கலமாம் ஆலமரம்
ஊஞ்சலாட உதவிடுமாம்
விழுதுகொண்ட ஆலமரம்

பல்லினையும் உறுதி செய்யுமாம்
பண்பு கொண்ட ஆலமரம்
நோய்கள் பல போக்கிடுமாம்
தலைமுறை கண்ட ஆலமரம்
பல ஆண்டுகள் நிலைத்து நிற்கும்
தண்மையான ஆலமரம்.

# 15 யானை



யானை நல்ல யானை
பானை வயிறு யானை
குட்டிக் கண்ணை உருட்டியே
குசும்பு செய்யும் யானை
ஊசி மலைக் காட்டிலே
உயர ஏறும் யானை
ஞாபக சக்தித் திறத்தாலே
ஞானமுள்ள யானை

சொக்கர் கோவில் வாசலிலே
சொக்காய் போட்ட யானை
போரடிக்கும் களத்தினிலே
நெல் உதிர்க்கும் யானை
போர்க்களத்தில் பகைவரையே
வேரறுக்கும் யானை

ஆயிரம் பொன்னாம் யானை
அரசரும் ஊர்ந்த யானை
விரைந்து ஓடி வாருங்களேன்
வியந்து பார்ப்போம் யானை


நன்றி